**தேனி மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**

(12-09-2015 – 16-09-2015)

**இணைந்து வழங்குபவர்கள்:** இந்திய வானிலை துறை, பிராந்திய வானிலை மையம் சென்னை, ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் மா.ச.சாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்

தேதி: 11-09-2015

**கடந்த கால வானிலை 08-09-2015 முதல் 10-09-2015 வரை**

| காரணிகள் | கடந்த கால வானிலை |
|---|---|
| மழை (மி.மீ) | 3.1 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 33-37 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 25 |
| மேக மூட்டம் | 6-7 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 45-76 |
| காற்றின் வேகம்(கி.மீ /மணி) | 13-17 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை 16-09-2015 - 8. 30 மணி நேரம் வரை**

| காரணிகள் | 12.09.15 | 13.09.15 | 14.09.15 | 15.09.15 | 16.09.15 |
|---|---|---|---|---|---|
| மழை (மி.மீ) | 2 | 0 | 0 | 2 | 3 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 33 | 33 | 33 | 33 | 33 |
| குறைந்த பட்ச வெப்பநிலை(செ) | 24 | 24 | 24 | 24 | 24 |
| மேக மூட்டம் | 6 | 6 | 6 | 6 | 6 |
| அதிக பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 79 | 78 | 77 | 76 | 77 |
| குறைந்த பட்ச ஈரப்பதம்(சதவீதம்) | 70 | 71 | 69 | 68 | 70 |
| காற்றின் வேகம்(கி.மீ /மணி ) | 8 | 8 | 8 | 8 | 8 |
| காற்றின் திசை | தெற்கு தென்மேற்கு | தெற்கு தென்மேற்கு | தெற்கு தென்மேற்கு | தெற்கு தென்மேற்கு | தெற்கு தென்மேற்கு |

**குறுஞ்செய்தி**

செம்டம்பர் 13 மற்றும் 14 தவிர, எதிர்வரும் ஐந்து நாட்களில், இலேசான தூறல் சில இடங்களில் எதிர்பார்க்கப்படுகிறது.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

- விவசாயிகள் விளை நிலத்தில் ஒரு பகுதியை மட்டும் மழை நீரை சேமித்து வைப்பதற்கு முறையான ஏற்பாடுகள் செய்ய அறிவுறுத்தப்படுகின்றன. ஏனெனில் இந்த மழை நீரை பயன்படுத்தி வறட்சி காலங்களில் பயிர்களுக்கு பாசனம் செய்யவதற்குப் பயன்படுத்த முடியும்.
- தோட்டக்கலைப் பயிர்களில் வேர்ப்பகுதியில் ஈரப்பத்தைப் பாதுகாக்க தென்னை நார்கழிவுகளைக் கொண்டு மூடவும்.
- நெல் பயிரில் தாக்கும் பச்சைத் தத்துப்பூச்சிகளைக் கட்டுப்படுத்த Phosalone 35% EC 120 ml/litre தெளிக்கவும்.
- நெல் நாற்றங்காலை நன்றாக கவனித்து நெற்பயிரில் குலை நோய் மற்றும் இலைப்புள்ளி நோய் தென்பட்டால் அதனைக் கட்டுப்படுத்த Carbendazim or bavistin @ 2.0 கிராம்/லிட்டர் என்ற அளவில் தண்ணிரில் கலந்து தெளிக்கவும்.
- நெல் பயிரைத் தாக்கும் தண்டுத் துளைப்பான் பூச்சியினைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு கார்டேப் ஹைட்ரோகுளோரைட் 50 % SP @ 400g/ac அல்லது பாஸ்போமிடான் 40% SL 500 ml/ac தெளிக்கவும்.
- நெல் பயிரைத் தாக்கும் மாவுப்பூச்சிகளைக் கட்டுப்படுத்த வேப்ப எண்ணை 2% அல்லது வேப்பங்கொட்டை சாறு 5% அல்லது தையோமீத்தாகசம் 25EC WG லிட்டருக்கு 0.6 கிராம் என்ற அளவில் பயன்படுத்தவும்.